புரட்சிப்

# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • செப்டம்பர், 25 2025 • புரட்சி 25 • முழக்கம் 38 • விலை ரூ.6.00

### செப்-17-ல் சென்னையில் எழுச்சியுடன் நடந்த பொதுக்கூட்டம்

# ஜாதி எதிர்ப்புக் களம் நோக்கி திரளும் இளைஞர்கள்

"எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்! ஜாதி நமக்கு அவமானம்! மனிதம் நமது அடையாளம்!" என்ற தலைப்பில் பொதுக்கூட்டம், செப்-17 அன்று, மாலை 5 மணிக்கு, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத் தலைமையில், சென்னை இராயப்பேட்டை வி.எம் தெருவில் நடைபெற்றது. கழக இளைஞரணி மற்றும் திருவல்லிக்கேணி பகுதி கழகத் தோழர்கள் இணைந்து பொதுக்கூட்ட வேலைகளை சிறப்பாக செய்திருந்தனர்.

பகுத்தறிவுப் பாடல்களை, "புதுவை விடுதலைக் குரல்" தோழர்கள் எழுச்சியுடன் பாடினார்கள். ராப் பாடலை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு பாடினார். திவிக மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி - பொன்ராஜ் ஆகியோரின் சமூக அரசியல் நையாண்டி நிகழ்ச்சி, மக்களின் கவனத்தைப் பெற்றது.

உச்சபட்ச ஆதிக்கத்தை செலுத்தும் பார்ப்பனர்களை எதிர்க்காமல் இருப்பதற்காக, பிற்படுத்தப்பட்டவர்களையும் பட்டியலினத்தவரையும் தங்களுக்குள் மோதிக்கொள்ளச் செய்யும் சூழ்ச்சியை அம்பலப்படுத்தும் விதமாக, புராண இதிகாசங்களை மேற்கோள் காட்டி, பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் புதுவை தீனா உரையாற்றினார்.

ஜாதி ஒழிப்பில் சமரசமின்றி திராவிடர் விடுதலைக் கழகம் இயங்குவதாகக் கூறிய மக்கள் வழக்கறிஞர் ப.பா.மோகன், திவிக உடனான அவருடைய களஅனுபவங்களை



நெகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டார். கார்ல் மார்க்ஸ் இந்தியாவில் பிறந்திருந்தால், அவர் பெரியாராரகத் தான் வாழ்ந்திருப்பார் என்று அவர் கூறிய கருத்து, பெரும் வரவேற்பைப் பெற்றது.

ஜாதியால் ஒரு பயனும் இல்லை என்பதை, தன் சொந்த வாழ்க்கையில் நடந்த சம்பவங்களின் மூலம், நகைச்சுவையாக விளக்கினார் இனமுரசு சத்யராஜ். நான் ஒரு பெரியாரிஸ்ட், நான் நடித்தபடங்களிலேயே பெருமையாக கருதுவது 'பெரியார்' படம் தான் என்றார்.

நிறைவாக சிறப்புரையாற்றிய பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இன்னும் ஏன் பார்ப்பனர்களை எதிர்க்கிறீர்கள்? என்பதற்கு வரலாற்றிலிருந்தும், சமகால நிகழ்வுகளிலிருந்தும் எடுத்துக்காட்டுகளை சுட்டிக்காட்டினார்.

இளைஞர் படையின் ஜாதி ஒழிப்புப் பரப்புரையை வெகுவாகப் பாராட்டினார். ஜாதி ஒழிப்புச் செயல்திட்டத்தில், கிராமக் கட்டமைப்பு உடைப்பையும், ஜாதிச் சங்கங்களை எதிர்க்க வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார்.

பொதுக்கூட்டத்தில் ஜாதி மறுத்து - சடங்கு மறுத்து, திருமணம் செய்துகொண்ட கழகத் தோழர்களை பாராட்டும் வகையில், 20க்கும் மேற்பட்ட இணையர்களுக்கு இனமுரசு சத்யராஜ் வழங்கினார்.

- தொடர்ச்சி 2-ம் பக்கத்தில்

## "இதுதான் திராவிடர் விடுதலைக்கழகம்"

பரப்புரைக் கூட்டங்கள் என்றாலே சென்னை மாவட்டக் கழகத் தோழர்களுக்கு உற்சாகம் தொற்றிக் கொள்ளும். பம்பரமாக களத்தில் சுழல ஆரம்பித்து விடுவார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக பல நூறு தெருமுனைக் கூட்டங்களை நடத்திய பயிற்சி அவர்களுக்கு உண்டு; அந்த அனுபவங்கள் அவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.

பரப்புரை வாகனம், ஒலிபெருக்கி, பார்வையாளர் இருக்கை, அவர்களிடம் தயார் நிலையில் இருக்கின்றன. வாகன வடிவமைப்பு, வாகன ஓட்டுதல், மின்சாரம் சரிபார்ப்பு, துண்டறிக்கை வடிவமைப்பு என்று அனைத்து பணிகளிலும் தோழர்கள் தங்களை வளர்த்துக் கொண்டு விட்டார்கள். இவை எல்லாவற்றையும் விட சிறந்த பேச்சாளர்களாகவும் தோழர்கள் தயராகி விட்டார்கள். பெண்களும் ஆண்களுமாக இளைஞர்கள் கூட்டம் இந்த பரப்புரை படையில் கம்பீரமாக சுழலும் காட்சி அற்புதமானது.



வலையொலி (யூடியூப்) வழியாக பல இலட்சம் பார்வையாளர்களை ஈர்த்து வைத்துள்ள பெரியாரியத் தோழர்கள் கழக மேடைகளில் பேசும் உரைகளில் செய்திகளும் வரலாறுகளும் நிறைந்திருக்கின்றன. தங்களுக்கான களமாக திராவிடர் விடுதலைக் கழக மேடைகளை அவர்கள் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

மேடையில் மட்டுமல்ல; கூட்டம் நடக்கும் பகுதிகளில் உள்ள கடைகள் பொதுமக்களிடமும் துண்டறிக்கை வழியாக கருத்துகளை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள் தோழர்கள்! அதன் வழியாக நிதியும் திரட்டுகிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கான செலவும் அப்பகுதி மக்கள் தரும் நன்கொடையிலேயே ஈடுகட்டப்படுகிறது. துண்டறிக்கைகள் வழியாக கொள்கைகளும் மக்களை சென்று அடைகிறது. 4 மணிக்கு தொடங்கும் இந்த நிகழ்வுகள் இரவு 9 மணி அளவில் நிறைவடைகின்றன. பகுதி தோழமை அமைப்புத் தோழர்கள் ஆங்காங்கே ஆதரவுக் கரங்களை நீட்டுகிறார்கள். இரவு உணவுகளையும் அவர்களே வழங்குகிறார்கள். ஒன்று கூடலில் நிலவும் மகிழ்ச்சியும், உற்சாகமும், கலகலப்பும் இணைந்து நிற்கும் உணர்வுகளை வார்த்தைகளால் விளக்கிட முடியாது.

டிசம்பர்-24 பெரியார் நினைவு நாள் வரை ஜாதி ஒழிப்புப் பரப்பரை என்ற அறிவிப்பு கழகத் தோழர்களை மீண்டும் இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு உள்ளாக்கி விட்டது. முகநூல் வழியாகவும், வலையொலி (யூடியூப்) வழியாகவும், டிஜிட்டல் ஆடியோ நிகழ்ச்சி (podcast) வழியாகவும் பெரியாரியக் கருத்துக்களையும் கழக செயல்பாடுகளையும் அறிந்த பல இளைஞர்கள் ஒவ்வொரு நிகழ்விலும் கழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்கேற்கிறார்கள். அவர்கள் தேர்வு செய்யும் அமைப்பு திராவிடர் விடுதலைக் கழகமாகவே இருக்கிறது. 80-90 களில் பிறந்தவர்கள் நிறைந்த கழகம், இப்போது 2000 ஆண்டில் பிறந்த இளைஞர்களையும் அரவணைத்துக் கொண்டு பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்த சென்னை கழகக் குடும்பத்தில் ஜாதி மறுப்பு மணம் புரிந்த இளைஞர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இவர்களில் பலர் மாநாடுகளிலும், விழாக்களிலும் ஜாதி மறுப்பு திருமணம் செய்தவர்கள். ஜாதி மறுப்பு இணையர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கினார்கள்.

"பரப்பரைப் பயணத்தின் சென்னை பொதுக்கூட்டத்தில் செல்வன் -இளமதி உட்பட 20-க்கும் மேற்பட்ட அந்த ஜாதி மறுப்பு இணையர்கள் மேடையில் தோன்றியக் காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. அப்போது சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி இப்படி கூறினார்.

**"பார்! இதுதான் திராவிடர் விடுதலைக் கழகம்; ஜாதி வெறியர்களே சாவுங்கடா". -இரா.**

### அலகாபாத் உயர்நீதிமன்றம் அதிரடி

## ஜாதி அமைப்பே தேசவிரோதி

ஜாதிப் பெருமையை உயர்த்திப் பிடிப்பதுதான் தேச விரோதம் என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் அதிரடியான தீர்ப்பு



HC: Glorifying caste anti-national, delete it from police records

ஒன்றை வழங்கி இருக்கிறது. கடந்த செப்டம்பர் 16-ஆம் தேதி காவல்துறை தொடர்பான ஒரு வழக்கில் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. தீர்ப்பை நீதிபதி வினோத் திவாகர் வழங்கி உள்ளார். தீர்ப்பில் கூறியுள்ளதாவது:

- தேச விரோதம் எது என்று கேட்டால் அது ஜாதிப் பெருமையை பேசுவது தான் (Glorifying Caste Anti-National). சமூகத்தில் ஆழமாக புரையோடி உள்ள ஜாதி அமைப்பை முற்போக்கான சட்டங்கள், கடுமையான பாகுபாடு எதிர்ப்பு சட்டங்கள், முற்போக்கு கொள்கைகள் வழியாக சமூகத்தை மாற்றி அமைக்க வேண்டும்.
- அரசியல் சட்டத்தின் பார்வையில் இதுதான் உன்னதமான தேசபக்தி என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.
- காவல்துறை பதிவு செய்யும் வழக்கு புகார் மனு, சாட்சிப் பதிவுகள்
- காவல்துறை அறிவிப்புகள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களிலும் ஜாதி அடையாளங்களை முழுமையாக நீக்க வேண்டும். படிவங்களிலேயே ஜாதி என்ற குறிப்பு இருக்கக் கூடாது. தந்தை பெயர் மற்றும் கணவர் பெயர்களை அடையாளங்களாக குறிப்பிடும்போது கட்டாயம் தாயார் பெயரையும் சேர்க்க வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.
- தனியார் மற்றும் அரசுக்கு சொந்தமான வாகனங்களில் ஜாதி அடையாளமோ, ஜாதி முழக்கங்களோ இடம் பெறக் கூடாது. அப்படி பதிவு செய்த வாகனங்களில் உரிமையை ரத்து செய்ய வேண்டும்.
- நகரங்களில் கிராமங்களில் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் பெயர் அறிவிப்பு பலகைகளில் ஜாதிப் பெயர் இடம் பெறக்கூடாது.
- ஜாதியை பெருமைப்படுத்தும் சமூக ஊடகங்கள் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜாதி அமைப்பையும் அதன் சமூக செல்வாக்கையும் துடைத்தெறியக்கூடிய ஒருங்கிணைந்த ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பு அளித்துள்ளார்.

**தலையங்கம்**

## அறிவியல் வளர்ச்சியும் பார்ப்பனியமும்!

அதிவேகமாக வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியால் நடுங்கிப் போய் நிற்கிறது வைதீக பார்ப்பனியம். பாரம்பரியம் என்ற பெயரில் தாங்கள் கட்டமைத்த சனாதன மரபுகள் சீர்குலைந்து விடாமல் காப்பாற்றும் முயற்சிகளில் அது இறங்கியிருக்கிறது. அதற்காக அறிவியலை சனாதான பழமைக்குள் தொடர்புபடுத்தும் திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக பள்ளி பாடத்திட்டங்களில் இந்த கருத்துக்களை திணிக்க தொடங்கி இருக்கிறார்கள்.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்க தமிழ்நாடு அரசு மறுத்துவிட்டாலும் ஒன்றிய ஆட்சி தமிழ்நாடு மீது திணிக்க முயிற்சிக்கிறது. தமிழ்நாடு வந்துள்ள ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பகிரங்கமாக இந்த கல்வித் திட்டத்தை தமிழ்நாடு ஏற்க வேண்டும் என்று மிரட்டுகிறார்.

தேசிய கல்விக் கொள்கையின் கீழ் உருவாக்கப்படும் பாடத்திட்டங்களில் "பாரதத்தின் பாரம்பரிய அறிவை முன்னிறுத்துதல்" என்ற பெயரில் மிக மோசமான பார்ப்பனிய கருத்துக்களை திணித்து வைத்துள்ளனர். இதற்காக பல்கலைக்கழக நிதி உதவிக்குழு வரைவு பாடத்திட்டம் ஒன்றை உருவாக்கி இருக்கிறது. குறிப்பாக தேசிய கல்விக் கொள்கையின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கான பட்டப் படிப்புகள் துவங்கப்பட இருக்கின்றன. இதில் மானுடவியல், வேதியியல், வணிகவியல், பொருளாதாரம், கணிதம் அரசியல், உள்ளிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டங்களின் வரைவை பல்கலைக்கழக மானியக்குழு உருவாக்கி சுற்றுக்கு விட்டுள்ளது.

குறிப்பாக கணிதப் பாடத்தில் பஞ்சாங்கத்தின் அடிப்படையில் நல்ல நேரம், கெட்ட நேரம் காண்பது எப்படி? முகூர்த்த நேரம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது? என்ற கருத்துக்கள் 'கால கணனம்' என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. நாரத புராணத்தில் கூறப்படும் கணித கருவிகள் குறித்தும், வேதங்களும் புராணங்கள் குறித்தும், பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுதவிர சித்தாந்தம், சூரிய யுகங்கள் குறித்த கால கணக்குகளும் பாடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

வேதியியல் பாடத்திட்டத்திற்கான வரைவு நகலில் சரஸ்வதி வந்தனம், ஆயுர்வேதம், சித்த வைத்தியம், ஹோமியோபதி மருந்து தயாரிப்புகள், நோய் தீர்க்கும் சமையல் முறை போன்ற பழமைவாத கருத்துக்களை இணைத்துள்ளனர். வணிகவியலில் சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம் கருத்துகளும், பகவத் கீதை மற்றும் ராமாயணத்திலிருந்து நிர்வாகம் பற்றிய குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

அரசியல் அறிவியல் பாடத்தில் வேதகால பாரம்பரியம்; மகாபாரதம்; மற்றும் உபநிடக் கருத்துக்களை சேர்த்ததோடு மட்டுமின்றி மனுநீதியும் சேர்க்கப்பட்டுள்ளது. பாரம்பரிய அறிவு என்ற பெயரில் அறிவியலோடு அறிவியலுக்கு எதிரான பார்ப்பனிய பிற்போக்கு கருத்துக்களை பாடத்திட்டத்தின் இணைப்பது தான் புதிய கல்வித் திட்டமாக இருக்கிறது.

புராணங்கள் வரலாறுகளாக கட்டமைக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்புகளை பதிவு செய்துள்ளார் கீழடி அகழ்வாராய்ச்சி ஆய்வாளர் அமர்நாத். கீழடி குறித்து அவரது 982 பக்க ஆராய்ச்சி அறிக்கையை ஒன்றிய ஆட்சி வெளியிட மறுத்து வருகிறது. அந்த அறிக்கையில் கால அளவை மாற்றி அமைத்து திருத்தி எழுதித் தரவேண்டும் என்று தொல்பொருள் ஆய்வுத்துறை முன்வைத்த கோரிக்கையை அவர் ஏற்க மறுத்துவிட்டார். மதுரையில் கடந்த வாரம் நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது கீழடி தமிழர் பண்பாட்டை மகாபாரதத்துடன் இணைக்கும் ஒன்றிய ஆட்சியின் முயற்சியை அவர் அம்பலப்படுத்தியுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில சுற்றுச்சூழல் மாணவர்கள் கீழடியோடு மகாபாரதத்தை முடிச்சுப் போட்டு எழுதிய கட்டுக்கதையை அவசர அவசரமாக ஏன் ஒன்றிய ஆட்சி வெளியிட வேண்டும் என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறார். இப்படி வரலாறுகளில் கட்டுக் கதைகளை திணிக்க முடியும் ஆனால் தொல்லியல் ஆய்வுகளில் கட்டுக்கதைகளை திணிக்க முடியாது. கீழடி நாகரீகம் தொல்லியல் ஆய்வுகளால் நிறுவப்பட்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மகாபாரதத்துக்கும் கீழடிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

சரஸ்வதி என்ற நதி பற்றி வேதங்களில் குறிப்பிடப்படுகிறது, என்பதால் அதைக் கண்டறிவதற்கு பல கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். ஆனால் கண்டறிய முடியவில்லை.

ஆளுநர் மாளிகையில் ஆர் என். ரவி 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற நிகழ்ச்சியை கடந்த வாரம் நடத்தியுள்ளார். ரிஷிகள், முனிவர்கள் மற்றும் யோகிகளால் உருவாக்கப்பட்டதே நமது பாரத கலாச்சாரம் என்று அவர் தம்பட்டம் அடித்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி பிராந்திய கலாச்சாரங்கள் பாரதத்தின் ஒருமைப்பாட்டுக்கே மிகவும் சேதாரத்தை ஏற்படுத்தி உள்ளது" என்று பேசி மாநில அடையாளங்கள் அழிக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டத்தையே அவர் அவமதித்து இருக்கிறார். அறிவியல் வளர்ச்சிப் போக்கில் செத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனியத்திற்கு உயிரூட்டும் முயற்சிகள் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன என்பதற்கு இவைகள் சான்றுகளாக இருக்கின்றன. வரலாறு மற்றும் அறிவியல் அயுதங்களால் இந்த சதிகளை முறியடிப்போம்.

# ஜாதி பேசும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை

பள்ளி மாணவர்களிடையே ஜாதிப்பாகுபாடுகளை உருவாக்கும் ஆசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இடமாற்றம் செய்ய வேண்டும் என்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை கடந்த வாரம் சுற்றறிக்கை விடுத்துள்ளது. இது பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

இத்தகைய ஜாதி உணர்வு கொண்ட ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க தவறினால், அது பள்ளி வளாகத்தில் கடும் விளைவுகளை உருவாக்கி விடும்; பள்ளிகளின் நம்பகத்தன்மையை சீர்குலைத்து விடும் என்றும் கல்வித்துறையின் சுற்றறிக்கை எச்சரிக்கிறது.

**சுற்றறிக்கையின் முக்கிய அம்சங்கள்:**

* பள்ளி நிர்வாகம் மாணவர்களின் ஜாதி அடையாளத்தை ரகசியமாக பாதுகாக்க வேண்டும்.

* ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிடமிருந்து கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களின் அடையாளங்களை வெளிப்படுத்தக் கூடாது.

* இதுகுறித்து நிர்வாகம் விளக்கம் கேட்க விரும்பினால், மாணவர்களை தனித்தனியாக முதல்வர் அறைக்கு அழைத்துப் பேச வேண்டும்.

* மாணவர்களிடம் அலைபேசி இருந்தால் அதை பறிமுதல் செய்து பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

* மாணவர்களுக்கான கோரிக்கை பெட்டியை வாரம் ஒரு முறை, மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு திறந்து பார்த்து பரிசீலிக்க வேண்டும்.

* மாணவர்களின் புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தலைமை கல்வி அலுவலகத்தில் தெரியப்படுத்த வேண்டும்.

பள்ளிகளில் ஜாதிப் பாகுபாடுகளை நீக்குவது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அமைத்த குழு இந்த பரிந்துரைகளை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பள்ளி மாணவர் சேர்க்கையின் போது பள்ளிக்கல்வித்துறை அனுப்பிய ஒரு சுற்றறிக்கையில், ஜாதிக் கயிறுகளை அனுமதிக்கக் கூடாது என்று அறிவுறுத்தியது.

இது தவிர, தமிழ்நாடு அரசின் ஐந்தாவது காவல் ஆணையத்தின் அறிக்கைஒரு முக்கிய கருத்தை பள்ளிக் கல்வித் துறைக்கு பரிந்துரைத்தது ஜாதி பதட்டம் நிறைந்த பகுதிகளில் , உள்ளூர் ஆதிக்க ஜாதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் நியமனத்தை தவிர்க்க வேண்டும் என்பதே அந்த பரிந்துரை பள்ளிக்கல்வித்துறை இதையும் பரிசீலிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

பள்ளிக்கல்வித்துறையின் இந்த செயல்பாடுகள் பாராட்டி வரவேற்கப்பட வேண்டியவை!

**விடுதலை இராசேந்திரன், முகநூல் பதிவு.**

## காசாவில் இனப்படுகொலை நிறுத்து சென்னையில் பேரணி



காசா மீதான போரை நிறுத்து என்ற முழக்கத்தோடு பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் சென்னை புதுப்பேட்டையில் பேரணியும் அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டமும் 19.09.2025 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

பேரணியில் பங்கேற்று கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கண்டனவுரையாற்றினார். பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த இயக்கங்கள் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டனர். இளமாறன் (தமிழர் விடியல் கட்சி) ஒருங்கிணைபிபில், திருமாவளவன் (விசிக), கோவை கு. இராமகிருஷ்ணன் (தபெதிக), பேரா.ஜவாஹிருல்லா, திருமுருகன் காந்தி, நாகை திருவள்ளுவன்(தபுக), மருத்துவர் சாந்தி, மகா (மக்கள் மன்றம்), திரைக்கலைஞர்கள் பிரகாஷ்ராஜ், வெற்றிமாறன், சத்யராஜ், தீனா, அமீர் உள்ளிட்ட தலைவர்கள் கண்டனவுரையாற்றினர். பேரணியில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**முதல் பக்கம் தொடர்ச்சி**

இளைய தலைமுறையினரை பெரிதும் கவர்ந்த ஜாதி எதிர்ப்பு பரப்புரையில் 6 தோழர்கள் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். 10 நாட்கள் தொடர் பரப்புரையில் பங்கேற்ற 30-க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு நினைவுப்பரிசாக கருப்புச்சட்டைகளை இனமுரசு சத்யராஜ் வழங்கினார். கருத்துரையாற்றிய இனமுரசு சத்யராஜ், மக்கள் வழக்கறிஞர் ப.பா மோகன் அவர்களுக்கு கழக வெளியீடுகளை குமார், கோபி ஆகியோர் வழங்கினார்கள்.

கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக, திருவல்லிக்கேணி பகுதிக் கழகத்தின் சார்பில் யாழினி ரூ.5000 கழக பொதுச் செயலாளரிடம் வழங்கினார்.

தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், தென்சென்னை மாவட்டச் துணை செயலாளர் இராவணன், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வ. வேலு, தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர்கள் சூர்யா, சே. ராஜேஷ், IT WING தோழர்கள் தேன்மொழி, எழில், வீரா, அசோக், ஏசுகுமார், ராஜன், உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கழகச் செயல் வீரர்களும், தோழமை கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் பங்கேற்றனர்.

*செய்தி- ம.கி. எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்)*

# சென்னையில் வெற்றிநடை போட்ட ஜாதி எதிர்ப்புப் பரப்புரை!

மனிதம் நமது அடையாளம் ஜாதி நமக்கு அவமானம் என்ற தலைப்பில் கழக இளைஞரணி ஜாதி எதிர்ப்புப் பரப்புரைகளை செய்து வருகிறது. சென்னை, சேலம் மாவட்ட இளைஞரணி தோழர்கள் ஆர்வமுடன் இந்த பரப்புரைகளை நடத்தி வருகிறார்கள். சென்னையில் கடந்த 10 நாட்கள் தொடர் பரப்புரை தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது. மிக நேர்த்தியாக சென்னை மாவட்டக் கழக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ப.அருண் மற்றும் எட்வின் பிரபாகரன் இருவரும் இணைந்து பேச்சாளர்கள் மற்றும் இடங்களை தேர்வு செய்தனர். குறிப்பாக தோழமை இயக்கத் தோழர்கள், ஊடவியலாளர்கள் என பலர் சிறப்புரையாற்றினார்கள்.



கழகத்தில் இணைந்த புதிய தோழர்கள் சிலர் இந்த கூட்டங்களை தலைமையேற்று நடத்தினார்கள். இளைய தலைமுறையினரிடம் வெகுவாக இந்த கூட்டம் கவனிக்கப்பட்டது. அனைத்து தெருமுனைக் கூட்டங்களும் சென்னை மாவட்டக் கழக முகநூல் பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. அருவி வலையொலியில் வீடியோ வெளிவந்துள்ளது. 10 நாட்களும் பாடல்கள் வழியாக, அரசியல் நையாண்டி வழியாக, பறை இசை வழியாக பொதுமக்களை கவரும் விதமான கலைவடிவில் ஜாதி எதிர்ப்பு பரப்புரைக்கு வலுசேர்க்கும் விதமாக தோழர்கள் கலைநிகழ்ச்சிகள் நடந்த்து. தோழர்கள் வீரமணி, பொன்ராஜ், பேரன்பு ஆகியோர் அவர்களே எழுதி அவர்களே இசையமத்த ஜாதி ஒழிப்பு பாடல்கள் ஒப்பாரி, ராப் வடிவில் பல புதிய கோணத்தில் கருத்துச் செறிவுடன் பாடல்கள் பாடினர்.



**தெருமுனைக்கூட்டங்களின் தொகுப்பு:**

***முதல் நாள்:*** *தாம்பரம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற இளைஞரணியின் ஜாதி எதிர்ப்பு பிரச்சாரம் செப்-1 மாலை 5 மணிக்கு, தாம்பரம் சண்முகம் சாலையில் ச.சா. நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.*

ஜாஹிர் உசேன் (மமக மாவட்டத் தலைவர்), ப. சாமுவேல் (விசிக தாம்பரம் மாவட்டச் செயலாளர்), தா. கிருஷ்ணா (சிபிஎம் தாம்பரம் தொகுதிச் செயலாளர்), அருண் கோமதி (திவிக தாம்பரம் நகர அமைப்பாளர்), துரை மணிவண்ணன் (மதிமுக பகுதிச் செயலாளர்), சலீம் கான் (மமக காஞ்சி மாவட்டத் தலைவர்), பேரன்பு(சென்னை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.
தோழர்கள் வீரமணி, பேரன்பு, பொன்ராஜ் ஆகியோரின் பாடல்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. துரை மணிவண்ணன் இரவு உணவு ஏற்பாடு செய்துகொடுத்தார்.

***2வது நாள்:*** *ஆய்வரங்கத்தைப் போல நடைபெற்ற பிரச்சாரக் கூட்டம்! மீண்டும் முத்திரை பதித்த பல்லாவரம்!!*

செப்-2 அன்று மாலை 5 மணிக்கு, பல்லாவரம் ரங்கநாத தெருவில், சுபாஷ் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), கொ.கா. சரவணன் (விசிக பல்லாவரம் மாவட்ட அமைப்பாளர்), முகமது நயினார் (மமக மனித உரிமை அணியின் மாநிலத் துணைச்செயலாளர்), சீராளன் (புஇமு தாம்பரம் மாநகரத் தலைவர்), கார்த்தி (சிபிஅய் காஞ்சிபுரம் மாவட்டத் துணைச்செயலாளர்), தமிழ்வாணன் (புஇமு தாம்பரம் மாநகரச் செயலாளர்), தாமோதரன் (சிபிஎம் பல்லாவரம் பகுதிச் செயலாளர்) ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தோழர்கள் வீரமணி, பேரன்பு, பொன்ராஜ் ஆகியோரின் பாடல்களும் நாடகமும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. தோழர் தர்மராஜ் உணவு ஏற்பாடு செய்தார். பல்லாவரம் கூட்டத்தில், மக்கள் ஆர்வமாக கழக நூல்களை வாங்கிச் சென்றது குறிப்பிடத்தக்கது. விசிக மாவட்டத் துணை அமைபாளர் மை.பா.மணிவண்ணன் உள்ளிட்ட தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

***3வது நாள்:*** *மக்களின் பெரும் ஆதரவுடன் பிரச்சாரக் கூட்டம் செப்-3 அன்று மாலை 5 மணிக்கு, ஜாஃபர்கான் பேட்டை கங்கையம்மன் கோயில் தெருவில், சைதை சிவா தலைமையில் நடைபெற்றது.*

திவிக சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, விசிக சைதை தொகுதி துணைச் செயலாளர் பாண்டுரங்கன், சென்னை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, தீண்டாமை ஒழிப்பு முன்னணி (சிபிஎம்) மாவட்டத் தலைவர் ச.லெனின், அ. அறிவுமதி (திவிக) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தோழர்கள் வீரமணி, பேரன்பு, பொன்ராஜ் ஆகியோரின் பாடல்களும் நாடகமும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. தோழர் சாதிக், உணவு ஏற்பாடு செய்துகொடுத்தார். மதிமுக தென்சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் P. சுப்பிரமணி, தோழர்களுக்கு தேநீர் வழங்கினார். பொதுநல வழக்கறிஞர் சக்திவேல் உள்ளிட்ட பல கழகத் தோழர்களும், தோழமை இயக்க பொறுப்பாளர்களும் பங்கேற்று ஜாதி ஒழிப்பில் ஒன்றுபட்டு செயல்பட உறுதியேற்றனர்.

***4வது நாள்:*** *ஆணவப்படுகொலை எதிர்ப்புப் பிரச்சாரக் கூட்டம், செப்-4 அன்று மாலை 5 மணிக்கு, தியாகராயநகர் முத்துரங்கன் சாலையில், அ. அறிவுமதி தலைமையில் நடைபெற்றது.*

திவிக சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, விசிக தென்சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் கரிகால்வளவன், நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் ர. பிரகாசு, ததேமமு ஒருங்கிணைப்பாளர் செந்தில், புரட்சிப் பெரியார் முழக்கம் செய்தியாளர் பிரசாந்த், பா.ச. பாலசிங் (WPA சவுந்தரபாண்டியனார் பேரவை) ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர்கள் வீரமணி, பேரன்பு ஆகியோரின் பாடல்களும், தோழர்கள் உமாபதி - பொன்ராஜ் குழுவினரின் நையாண்டி நிகழ்ச்சியும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் அவர்களின் சகோதரர் கண்ணன் ஆகியோர் உணவு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தனர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பார்வையாளராக பங்கேற்றார்.

***5வது நாள்:*** *செப்-5 அன்று மாலை 5 மணிக்கு, எம்ஜிஆர் நகர் சந்தையில், துரைராசு தலைமையில் நடைபெற்றது. திவிக சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார். விசிக தென்சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் கரிகால்வளவன் U2BRUTUS மைனர், தேன்மொழி (திவிக சென்னை IT WING), இம்மேனுவல் துரை ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர்கள் வீரமணி, பேரன்பு,பொன்ராஜ், சிபி-அபி ஆகியோரின் பாடல்களை பொதுமக்கள் ரசித்துக் கேட்டனர். தோழர் துரை ராசு உணவு ஏற்பாடு செய்திருந்தார்.*

***6வது நாள்:*** *அம்பத்தூரில் தடம்பதித்த கழகம்! அம்பத்தூரில் முதல் முறையாக திராவிடர் விடுதலைக் கழகம் தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது. வலதுசாரிகள் ஆதிக்கம் அதிகம் உள்ள பகுதியில் கழகம் ஜாதி எதிர்ப்பு பரப்புரையை சிறப்பாக நடத்திமுடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. புதிதாக இணைந்த தோழர்கள் ஆர்வமுடன் இந்த பகுதியில் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்தனர்.*

செப்-6 அன்று மாலை 5 மணிக்கு, அம்பத்தூர் பஜார் தெருவில் (வடசென்னை), சதீஷ் கண்ணன் தலைமையில், பிரனேஷ் முன்னிலையில் நடைபெற்றது. திவிக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

மதிமுக செய்தித் தொடர்பாளர் ஆவடி அந்தரிதாஸ், விசிக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் தேவஞான முதல்வன், விசிக அம்பத்தூர் தொகுதிச் செயலாளர் ஏ.பி. இப்ராகிம், சென்னை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, இம்மானுவல் துரை, லீலாவதி (ஊடகவியலாளர்) ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர்கள் வீரமணி, பேரன்பு, பொன்ராஜ், சிபி - அபி ஆகியோரின் பாடல்களைக் கேட்டு பொதுமக்களின் கவனம் மேடையை நோக்கி நகர்ந்தது. திமுக 82வது வட்டப் பொறுப்பாளர் சிவா உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

***7வது நாள்:*** *செப்-8 அன்று மாலை 5 மணிக்கு, அமைந்தகரை அம்மன் கோயில் தெருவில் இளவரசன் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் தலைமையில் நடைபெற்றது. திவிக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார். சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், விசிக மய்யசென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் பா. வேலுமணி, ஆய்வாளர் தமிழ் காமராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

தோழர்கள் வீரமணி, பொன்ராஜ் ஆகியோரின் ஆணவக்கொலை பற்றிய ஒப்பாரிப் பாடல், மக்களை உணர்ச்சிவசப்பட வைத்தது. திவிக வடசென்னை மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி உணவு ஏற்பாடு செய்திருந்தார்.

***8வது நாள்:*** *செப்-9 மாலை 5 மணிக்கு, வேளச்சேரி காந்தி சாலையில், இம்மானுவல் துரை தலைமையில் நடைபெற்றது. திவிக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.*

திவிக சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, சென்னை மாநகராட்சி மாமன்ற திமுக பொருளாளர் பெ. மணிமாறன் MC, ஊடகவியலாளர்கள் இந்திரகுமார் தேரடி, மு.க. தினேஷ் குமார் , விசிக தென்சென்னை தெற்கு மாவட்ட செய்தித் தொடர்பாளர் ப. வளவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் புருஷோத் அப்பு உருவாக்கிய "மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்" என்று பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசுகளை சிறப்பு அழைப்பாளர்கள் பெற்றுக் கொண்டனர்.

தோழர்கள் பொன்ராஜ், வீரமணி, பேரன்பு குழுவினரின் ஆணவக்கொலை பற்றிய ஒப்பாரிப் பாடல், மக்களை சோகத்தில் ஆழ்த்தியது. திமுக கவுன்சிலர் பெ. மணிமாறன், ம.கி. எட்வின் பிரபாகரன் ஆகியோர் உணவு ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டனர். திவிக தலைமைக்குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், திக மாவட்ட பொறுப்பாளர்கள் பாண்டு, ஜெயராமன், AISCST வங்கி ஊழியர் சங்க பொறுப்பாளர் ஆனந்தராஜ் மதிமுக தோழர்கள் ஏழுமலை, பார்த்திபன் உள்ளிட்ட பல கழகத் தோழர்களும், தோழமை இயக்கப் பொறுப்பாளர்களும் பங்கேற்ற நிகழ்வு எழுச்சியோடு நடைபெற்றது.

***9வது நாள்:*** *செப்-10 மாலை 5 மணிக்கு, தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையில், த. எழிலரசன் தலைமையில் நடைபெற்றது. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, பேச்சாளர் மகிழவன், தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, தமிழ்நாடு மாணவர் கழகம் பேரன்பு, தேன்மொழி (IT WING) ஆகியோர் உரையாற்றினர்.*

தோழர்கள் பொன்ராஜ், வீரமணி, பேரன்பு குழுவினரின் ஆணவக்கொலை பற்றிய ஒப்பாரிப் பாடல், மக்களிடம் அதிர்வலைகளை உருவாக்கியது.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தென்சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் இராவணன், சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், வடசென்னை மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, வடசென்னை மாவட்டத் துணைச்செயலாளர் ஆ.வ.வேலு, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபி, திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் ராஜேஷ், திருவல்லிக்கேணி பகுதித் அமைப்பாளர் த.நா.சூர்யா, மற்றும் கழகத் தோழர்கள் யாழினி, ஷர்மிளா (மாணவர் கழகம்), ஓவியா, தேன்மொழி, அருள்தாஸ், ராஜன், தினகரன், சிகாமணி , கார்த்தி ராஜேந்திரன், ஏசு குமார், சுகுமார், மயிலை குமார், வீரமுத்து, அசோக் ஆகியோர் 9 நாட்களும் கலந்து கொண்டு கடைவீதி பிரச்சாரம், கழக வெளியீடுகளை விற்பனை செய்தல், துண்டறிக்கைகள் கொடுத்தல் போன்ற களப்பணிகளை செய்தனர்.

# எதிர்ப்புகளை புறந்தள்ளி மயிலாடுதுறையில் கழகம் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை!

மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் "ஜாதி நமக்கு அவமானம்! மனிதம் நமது அடையாளம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள்" என்ற தலைப்பில் பரப்புரைப் பயணமாக இரண்டு நாட்கள் நடைபெற்றது. 6 பரப்புரைக் கூட்டங்களை தோழர்கள் நடத்தியுள்ளனர்.

**முதல் நாள்:** செப்-2 அன்று மாலை 4.00 மணிக்கு சீர்காழியில் மாவட்டச் செயலாளர் மகேஷ் தலைமையில் நடைபெற்றது. தபெதிக மண்டலச் செயலாளர் பெரியார் செல்வம் கலந்து கொண்டு பயணத்தின் நோக்கங்கள் வெற்றி பெற ஆதரித்து பேசினார். மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை துரை.தாமோதரன் செய்து காட்டி மக்களிடையே பரப்புரை பயணத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினார்.

தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா, மாவட்ட அமைப்பாளர் செந்தில், மாவட்டப் பொருளாளர் விஜயராகவன், தில்லை நாதன், சிதம்பரம் மதன்குமார், பாடாலூர் சுதாகர், மௌனி, வழக்குரைஞர் நன்மாறன், தபெதிக மாவட்டத் தலைவர் பரசுராமன், தமிழர் உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சுப்பு.மகேசு, தமிழ்மண் தன்னுரிமை இயக்கத்தின் நெறியாளர் பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மாலை 6.00 மணிக்கு குத்தாலம் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. மதிமுக மாநில இளைஞரணிச் செயலாளர் ஆசைத்தம்பி பயணத்தை ஆதரித்து பேசினார். மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை தோழர் துரை.தாமோதரன் மக்கள் ஆதரவுடன், சிந்திக்கும் வகையில் நடத்தினார். பேராசிரியர் ஜெயராமன் அவர்கள் ஜாதி உருவான விதம், அதை நாம் ஏன் கைவிட வேண்டும் என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகவும், நகைச்சுவையாக உரையாற்றினார்.

**இரண்டாம் நாள்:** 3.9.25 மதியம் 3.00 மணிக்கு மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் துரை தாமோதரன் அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். பேராசிரியர் ஜெயராமன் பயணத்தின் நோக்கங்களை விளக்கி விரிவாக பேசினார். பரப்புரையை பாராட்டி விசிகவின் சட்ட மன்ற தொகுதிச் செயலாளர் பொன்னுத்துரை பேசினார். நிகழ்ச்சியில் திமுக நகர துணைச் செயலாளர் தெய்வநாயகம், தமிழர் உரிமை இயக்கம் சுப்பு மகேசு உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாலை 4.30 மணிக்கு செம்பனார் கோவில் கடைவீதியில் மந்திரமா?தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை தோழர் தாமோதரன் செய்து காட்டிய பிறகு பேராசிரியர் ஜெயராமன் உரையாற்றினார். விசிக பொறுப்பாளர் இராஜசேகர் கலந்து கொண்டார்.

இரவு 7.00 மணியளவில் சங்கரன்பந்தல் கடைவீதியில் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியை தாமோதரன் திரளாக கலந்து கொண்ட மக்களிடம் செய்து காட்டிய பிறகு பேராசிரியர் ஜெயராமன் பேச ஆரம்பித்த போது, நாம் தமிழர் கட்சியை சேர்ந்த நபர் கூட்டத்தில் புகுந்து தேவையற்ற கேள்விகளை எழுப்பினார், அதற்கும் பதில் சொன்ன பேராசிரியர் ஜெயராமன் அவர்களை பேசவிடாமல், கூட்டத்தை கலைக்கும் நோக்கத்துடன் பாஜகவை சேர்ந்த அழகிரி என்ற நபருடன் சேர்ந்து கொண்டு நாம் தமிழர் கட்சி நபர் சத்தம் எழுப்ப பாதுகாப்புக்கு நின்றிருந்த காவல்துறை ஆய்வாளர், அனுமதி பெற்று கூட்டம் நடத்துகின்றனர், நீங்க வேண்டுமானால் அனுமதி பெற்று அவர்கள் சொன்னது தவறானது என்று மக்களிடம் பேசுங்கள் என்று கூறினார்.

ஆனால் அங்கு திரண்டிருந்த மக்கள் நீங்க பேசுங்கள் அவர்கள் யார் கேள்வி கேட்க என்று அவர்களை புறக்கணித்தனர். பேசி முடித்த உடன் அப்பகுதி மக்கள் பேராசிரியர் ஜெயராமன் அவர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தனர். தமிழ்மண் தன்னுரிமை இயக்கத்தின் நெறியாளர் பேராசிரியர் ஜெயராமன் பரப்புரையின் அனைத்து கூட்டங்களிலும் பங்கேற்று பேசியது குறிப்பிடதக்கது. சங்கிகளின் எதிர்ப்புடன் சிறப்பாக பரப்புரை நிகழ்ந்தது.

இரவு 8.30 மணிக்கு கொல்லுமாங்குடி கடைவீதியில் தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா தந்தை பெரியார் நடத்திய ஜாதி ஒழிப்பு போராட்டம் குறித்தும், பயணத்தின் நோக்கங்கள் குறித்தும் பேசினார். பேராசிரியர் ஜெயராமன் விரிவாக பயண நோக்கங்கள் குறித்து பேசினார். கூட்டம் முடியும் வரை பேச்சை கேட்ட தொழிலாளி ஒருவர் நன்கொடையும் கொடுத்து தனது அன்பையும் , ஆதரவையும் தெரிவித்து சென்றார். முதல் கட்டமாக இப்பரப்புரை பயணம் மயிலாடுதுறை சுற்றுவட்டார பகுதிகளில் நடைபெற்று முடிந்தது.

**– செய்தி– மகேஷ்**

## சூரியகுமார்–காயத்ரி இல்ல மணவிழா!




சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் கழக சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் ப. கு. சூரியகுமார்- காயத்ரி ஆகியோரின் மகன் இனியன் அவர்களுக்கும், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தை சேர்ந்த ம.சதிஷ்குமார்- ம.சுமதி ஆகியோரின் மகள் ரிதிசக்தி அவர்களுக்கும் வாழ்க்கைத் துணைநல ஏற்பு விழா 14.09.2025 அன்று காலை 10.30 மணியளவில் மேட்டூர், நவப்பட்டி திருமலை மாதவி மகாலில் நடைபெற்றது. சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராஜ் வரவேற்புரையாற்றி பெரியார் பாடல்களை பாடினார்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் தலைமையேற்புரையாற்றி, இணையர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி இணையர்களுக்கு வாழ்க்கைத் துணைநல ஏற்பு ஒப்பந்தம் செய்து வைத்து உரையாற்றினார்.

இணையர்கள் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ 25,000 கழகப் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் அவர்களிடமும், ரூ25,000 கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடமும் வழங்கினர்.

இறுதியாக சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் ப.கு. சூரியகுமார் நன்றியுரையாற்றினார். இதில் சேலம், ஈரோடு, நாமக்கல், திருப்பூர், கோவை, சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். கருஞ்சட்டைக் குடும்பங்களின் விழாவாக சிறப்புடன் நடைபெற்றது.

## தமிழக மக்கள் முன்னனி பரப்புரை

தமிழக மக்கள் முன்னணி சார்பாக நடத்தும் முற்றத்திகார தமிழ்நாடே முதன்மை இலக்கு என்ற முழக்கத்தோடு சென்னை மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை, ராமேசுவரம், திருச்செந்தூர், ஈரோடு என 6 முனைகளில் இருந்து பரப்புரை பேரணிகள் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் வந்தடைந்து 31.08.2025 மாலை 5 மணி அளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சி பேராசிரியர் த.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. நிலவழகன் பொதுக்கூட்ட ஒருங்கிணைப்பு உரையாற்றினார் தமிழ்வாணன், கண குறிஞ்சி, நிலவன், செல்வவேள், தங்க குமரவேல், பாவெல், சுப்பு மகேஷ், நாகேசுவரன், சௌ. சுந்தரமூர்த்தி, எட்வின், காஞ்சனா, குணசேகரன் ஆகிய தோழர்கள் தீர்மானங்களை வலியுறுத்தி உரையாற்றினார்கள்.

ஆசிரியர் தேன்மொழி, முனைவர் மா. பூங்குன்றன், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி மீ. தா. பாண்டியன், தபெதிக சீனி.விடுதலை அரசு, மக்கள் கலை இலக்கியக் கழகம் கோவன், மக்கள் அதிகாரம் கழகத் குருசாமி, மார்க்சிய பெரியார் பொதுவுடைமைக் கட்சி துரை சித்தார்த்தன், திக சி. தங்கராசு, தமிழ் தேசக் குடியரசு இயக்கம் க. இரா. தமிழரசன், ஐந்திணை மக்கள் கட்சி தேவதாசு, தமிழ் தேச மார்க்சிய கழக மதியவன் இரும்பொறை ஆகியோர் தீர்மானங்களை வரவேற்று உரையாற்றினார்கள்.

விசிக துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு இப்பொதுக்கூட்ட 6 தீர்மானங்களை முன்மொழிந்து, ஆர்எஸ்எஸ், பிஜேபி போன்ற அமைப்புகள் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராக இந்துராஸ்ட்ரம், ராமராஜ்யம் அமைக்க முன் வருமேயானால் பெரியார் கூறியதைப் போல் தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோரிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முன்வைக்கும் என தீர்மானங்களை வரவேற்று உரையாற்றினார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் தமிழக மக்கள் முன்னணி அமைப்பின் செயல்பாடுகளை பாராட்டி தீர்மானங்களை வரவேற்று, முன்மொழிந்து உரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழக மக்கள் முன்னணி வைத்த கோரிக்கைகள் தமிழ்நாடு எங்கும் பரவி தேவைப்பட்டால் இந்தியா முழுவதும் பரவி ஒரு அரசு உருவாகட்டும் எனக் கூறி தீர்மானங்களை வரவேற்று உரையாற்றினார்.

அற்புதம் அம்மாள், பழனிராஜன் ஆகியோர் முற்றதிகாரத் தமிழ்நாடே முதன்மை தேவை என்ற பரப்புரை பயணத்தில் கலந்து கொண்ட 6 குழுக்களுக்கும் பயனாடை அணிவித்து சிறப்பு செய்தனர்.

இறுதியாக தமிழக மக்கள் முன்னணி பொழிலன் பொதுக்கூட்டத்தின் தீர்மானங்களை முன்மொழிந்து உரையாற்றினார். கபிலன் நன்றியுரையாற்றினார். இதில் கழகத் தோழர்கள் பெரம்பலூர் மாவட்ட தலைவர் தாமோதரன், பெரம்பலூர் ஒன்றிய செயலாளர் ராஜேஷ் குமார், விஜயகுமார், சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில் அனுமதியின்றி வைக்கப்பட்ட விநாயகர் சிலை அகற்றம்

திருப்பூர் மாஸ்கோ நகரில் தனியாருக்கு சொந்தமான இடத்தில் புதிதாக விநாயகர் சிலை வைப்பதற்கு இந்து முன்னணி அமைப்பினர் முயற்சித்தனர். திராவிடர் விடுதலைக் கழகத்தோழர்கள் வடக்கு காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தனர்.

அரசு வழிகாட்டுதல் முறையில் சிலையை அகற்றுவதாக காவல்துறை தெரிவித்தது.

உடனடியாக இந்தச் செய்தி புகைப்பட ஆதாரங்களுடன் காவல் துறைக்கு திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இணைய வழியாக புகாராக தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் சிலையை இந்து முன்னணியினர் அகற்றவில்லை.

இதை அறிந்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டத் தலைவர் முகில் ராசு, மாநகரச் செயலாளர் மாதவன் ஆகியோர் உடனடியாக காவல் நிலையத்திற்கு சென்று விதிகளை மீறி வைக்கப்பட்டிருக்கும் சிலையை அகற்ற வலியுறுத்தி எழுத்துப்பூர்வமாக முறையான புகார் மனுவை அளித்தனர்.

அதன் அடிப்படையில் 27.08.25 அன்று காலை வைக்கப்பட்ட சிலை அன்று மாலையே காவல்துறையால் அகற்றப்பட்டது..

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுத்த திருப்பூர் மாவட்ட காவல்துறைக்கு கழகம் சார்பில் நன்றி.

# “கடவுளை” ஓரம் கட்டுகிறது அறிவியல்

## கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை-16

**- விடுதலை இராசேந்திரன்**

நடிகர் ரோபோ சங்கர்(46 வயது) இறந்த **துயரமான செய்தி வந்தது. உண்மையிலேயே இது துயரமானதுதான். இதற்கு இரங்கல் தெரிவித்த நடிகர் எம்.எஸ் பாஸ்கர் இவ்வாறு கூறினார்; “மரணத்துக்கு எவர் மீதும் குறைகாண முடியாது. கடவுள் அவருக்கு விதித்த ஆயுள் அவ்வளவுதான், முடிந்ததும் அவர் அழைத்துக் கொண்டார்.” ஒவ்வொருவருக்கும் கடவுள் ஆயுள் காலம் நிர்ணயித்துக் கொண்டு இருக்கிறாரா?..**

* இறந்து போனவர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கும் சடங்கு அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. ஒருகாலத்தில் வீடுகளில் நடத்தப்பட்ட சடங்குகள் இப்போது பொதுநிகழ்வாக திட்டமிட்டு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் வேத பார்ப்பன பண்டிதர்கள் கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். இதற்கு சரியான நாளாக புரட்டாசி மாதம் அமாவாசையை தேர்வு செய்து இருக்கிறார்கள். அந்த ஒரு நாளில் மட்டும் தான் வேறு உலகத்தில் இருந்தும் மூதாதையர்களுக்கு இவர்கள் தரும் தர்ப்பணம் டெலிவெரி ஆகுமாம். இப்படி ஒரு புரட்டு!

அதுவும் ஆண்களுக்கு மட்டுமே இப்படி தர்ப்பணம் செய்கின்ற உரிமை உண்டு. இப்படி ஒரு பெண்ணடிமை!

* இந்த தர்ப்பணப் பொருட்களை பெற்று ‘மேல் உலகத்திற்கு’ அனுப்பி வைக்கும் அதிகார உரிமையை வேதம் படித்த பிராமணர்களோடு சனாதனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளது. அதைக் கொண்டு போய் சேர்க்கும் சக்தியும் தங்கள் சமஸ்கிருதத்திற்கு தான் உண்டு என்று கூறி தமிழர்களின் மூளையில் திணித்திருக்கிறார்கள். சட்டை இல்லாத ஆண்களும் சட்டை இல்லாத வேத பண்டிதர்களும் கடற்கரையில் பல்லாயிரக்கணக்கில் கூடி நின்ற அரைநிர்வாணக் காட்சிகளை ஊடகங்கள் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. அன்றைய தினம் காக்கைக்கு சைவச் சோறும் போட வேண்டுமாம். ஒரே நேரத்தில் காக்கைகளுக்கு வந்த அழைப்புகளை காக்கைகளால் சமாளிக்க முடியவில்லை. பல்லாயிரக்கணக்கில் அழைப்பு வருகிற போது ‘அட்டன்ட்’ செய்ய முடியாமல் காக்கைகளே நேரம் ஒதுக்கி தர மறுத்துவிட்டன. காக்கைகளையே காக்காய் பிடிக்க முடியவில்லை.

**இதனால் தான் ஆத்மா, பிதிர்லோகம், மோட்சம் இவைகளை கற்பித்தவன் முட்டாள் இவற்றால் பயன் அடைகிறவன் அயோக்கியன் என்றார் பெரியார்.**

மாடு செத்தால் எடுத்துபோய் தின்றுவிடுகிறார்கள். குதிரை செத்தால் சாப்பிடாமல் புதைத்து விடுகிறார்கள். இவைகள் சொர்க்கத்தில் இருக்கின்றன, நரகத்தில் இருக்கின்றன என்று எவரும் கருதுவதில்லை. ஆனால் இந்த முட்டாள்தனத்தை மனிதனுக்கு தான் ஒட்ட வைத்துவிட்டார்கள்.

சொர்க்க லோகம் என்பது எந்த பூகோலத்தில் இருக்கிறது. கீழே ஆயிரக்கணக்கான மைல்களுக்கும், மேலே 16 லட்சக்கணக்கான மைல்களுக்கும் வானசாஸ்த்திரிகள் விவரம் கண்டுபிடித்துவிட்டார்கள். எங்குமே சொர்க்கலோகம் இருப்பதாக கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே சொர்க்க லோகமே சந்தேகத்திற்கு இருக்கும் போது. சொர்க்கலோகத்தில் கடவுள் இருக்கிறாரா? என்றால் என்ன பதில் சொல்வது?

இயற்கையெய்தல் என்கின்றதின் தத்துவம் அதாவது மனிதனின் அவயங்கள் தத்தமது வேலைகளைச் செய்யும் சக்தியை இழப்பதோடு, மனிதனின் காற்றை உள்ளே வாங்கி வெளியே விடக்கூடிய காற்று வாங்கிப் பொறியின் இயக்கம் நின்று போய்விடுகிறபோதுதான் மனிதன் இயற்கையெய்தினான் அல்லது முடிவெய்தினான், செத்துப் போய்விட்டான் என்று சொல்லப்படுகின்றது.

ஒரு கடிகாரத்திற்கு அதன் சாவியின் அதாவது விசைத் தகட்டின் வளைவு சக்தி இருக்கும் வரையிலே கடிகாரம் இயங்குகிறது; மணி காட்டுகிறது. அந்த சாவியின் சக்தி நின்றவுடனே கடிகாரமும் நின்றுவிடுகிறது. அப்போது அந்த கடிகாரத்தின் ஆத்மா’ மேலே போயிற்றென்றா சொல்ல முடியும்? முடி யாதே. கடிகாரத்தின் விசை தீர்ந்து அசைவு நின்றுவிட்டது என்பதுதானே உண்மை. அதுபோலத்தானே மனிதர்களின் அசைவு சக்தி; இயற்க சக்தி அற்றுப் போனால், செத்துப் போனால் வெறும் பிணம் ஆகிவிட்டான் என்கிறோம்.

இது மனிதனுக்கு மட்டுமல்லாமல், மிருகங்கள் - முதல் புழு, பூச்சி,கிருமி, புல் பூண்டு, தாவரங்கள் முதலியனவின் தன்மை யும் இந்தப்படியேதான் இருக்கின்றன. என்னவெனில், இயற்கையெய்துதல் என்பதில் பொது விதியாக இருக்கின்றது. இயற்கையெய்துதல் என்பதன் பொருள் என்னவென்றால், காணப்படும் பொருள், ஜீவன் உள்பட எல்லாமே தோன்றுதலும், தோன்றியவை யாவும் மறைவதுமான குணத்தை இயற்கையாகக் கொண்டவை, ஆனதால் மாற்றமடைந்ததையும், மறைந்ததையும் இயற்கை எய்திற்று என்கின்றோம்.

மனிதன் இயற்கையெய்திய பின்னர் அவனுடைய ஆத்மா இங்கேயே உலவி வருகிறது அல்லது அவரவர்கள் செய்த வினைப்பயனின்படி பரலோகத்தில் அவையவைகள் பெறக்கூடிய இடங்களைப் பெற்று, அதாவது மோட்ச நரகங்களை அடைந்து விடுகின்றன அல்லது பிதுர்லோகத்தில் இருக்கின்றது அல்லது மறு ஜன்மம் அடைந்துவிட்டது அல்லது பிசாசாக ஆகிவிட்டது" என்பதெல்லாம் அசல் முட்டாள்தனமாகும்.

இவையெல்லாம் ஒரு கூட்டத்தார் நோகாமல் பாடுபடாமல் வாழ்வதற்காக, நம்முடைய முட்டாள்தனத்தையே கைமுதலாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சங்கதிகளாகும். அதை கொஞ்சங் கூட சிந்தித்துப் பார்க்காமல், பகுத்தறிவு கொண்டு யோசித்துப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி வருகிறார்கள். ஆத்மா, மோட்சம், நரகம் என்கின்ற சொற்கள் தமிழ் சொற்களே அல்ல. தமிழிலும் அவைகளுக்கு ஏற்ற சொற்களே கிடையாது.

- **"விடுதலை"** - 7.09.1950

● பரிணாம வளர்ச்சியில் இறந்து போன உடல்களை என்ன செய்வது என்று மனித குலம் தடுமாறி குழப்பத்தில் நின்றதை வரலாறு நமக்கு கூறுகிறது. இப்போது இறப்பு என்ற ஒன்றே இல்லாத நிலை நோக்கி அறிவியல் வளர்ந்து கொண்டு இருக்கிறது.

● பெர்லினில் அமைந்துள்ள ‘டுமாரோ பயோ’ (Tomorrow Bio) என்ற ஜெர்மன் ஸ்டார்ட்அப் நிறுவனம், மனிதர்களின் ‘சாகா வரம்’ நோக்கிய தேடலில் ஒரு புதிய, ஆராய்ச்சியில் அடியெடுத்து வைத்துள்ளது. மரணமடைந்தவர்களின் உடல்களைப் பாதுகாத்து, எதிர்கால அறிவியல் வளர்ச்சியால் மீண்டும் உயிர் பெறச் செய்யும் திட்டத்தை இவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக உலகெங்கும் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று வரும் நிலையில், இந்த முயற்சி மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளது.

**● நடிகர் ரோபோ சங்கரை கடவுள் அழைத்துக் கொண்டாரா?.**

**● சீன அதிபரும், ரஷ்ய அதிபரும் பேசிய ’இறவாமை.’**

**● இறந்தவர்களுக்கு உயிரை மீட்டுத் தரும் ஜெர்மன் ஆய்வு நிறுவனம்.**

**● காக்காய் பிடிக்க முடியாத காக்கைகள்...**

டுமாரோ பயோ நிறுவனம், உயிரிழந்தவர்களின் உடல்களை மிகக் குறைந்த வெப்பநிலைக்கு (கிரையோப்ரிசர்வேஷன் - Cryopreservation) விரைவாகக் குளிர்விப்பதன் மூலம் பாதுகாக்கின்றது. இதன் நோக்கம், உடல் செல்களின் சேதத்தையும் சிதைவையும் தடுத்து நிறுத்துவதாகும். எதிர்காலத்தில் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் வளரும்போது, உறைய வைக்கப்பட்ட இந்த உடல்களை மீண்டும் உயிருடன் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த நூதன முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சேவைக்கான கட்டணம் சற்றே அதிகம். $200,000 (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.74 கோடி) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறந்த உடலைப் பாதுகாப்பதில் நேரம் மிக முக்கியம் என்பதால், சட்டப்பூர்வ மரணத்திற்குப் பிறகு உடனடியாக செயல்முறையைத் தொடங்குவதே டுமாரோ பயோவின் திட்டமாகும். இதற்காக, 24 மணி நேரமும் செயல்படும் அவசரக் காத்திருப்பு குழுவையும் அவர்கள் வைத்துள்ளனர்.

இதுவரை, 650க்கும் மேற்பட்டோர் ஆச்சரியப்படத்தக்க வகையில் இந்தச் சேவைக்கு முன்பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மரணத்திலிருந்து அறிவியல் தங்களைக் காக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் தங்கள் உடலைப் பாதுகாக்க முடிவெடுத்துள்ளனர். ஐரோப்பாவில் இதுபோன்ற சேவையை வழங்கும் முதல் நிறுவனம் டுமாரோ பயோ ஆகும். இதுவரை 3 அல்லது 4 மனித உடல்களையும், 5 செல்லப் பிராணிகளின் உடல்களையும் இந்த நிறுவனம் பராமரித்து வருகிறது என்பது வியப்புக்குரிய தகவல். விரைவில் அமெரிக்காவிலும் இந்தச் சேவையை அறிமுகப்படுத்த டுமாரோ பயோ திட்டமிட்டுள்ளது.

டுமாரோ பயோ’வின் இந்த முயற்சி, மனிதர்களின் சாகா வரம் குறித்த ஆசையையும், எதிர்கால அறிவியல் மீதான நம்பிக்கையையும் ஒருசேர வெளிப்படுத்துகிறது.

*** வயது ஆக ஆக நம் உடல் உறுப்புகள் பழுதாகும். அப்படிப் பழுதான உறுப்புகளுக்குப் பதிலாகப் புதிய புதிய உறுப்புகளை மாற்றுவதன் மூலம் முதுமையைத் தடுக்க முடியும்; மனித ஆயுளை நீட்டிக்க முடியும். இப்படிச் சொன்னவர்கள் மருத்துவர்களோ, விஞ்ஞானிகளோ அல்ல! இரண்டு பெரிய வல்லரசு நாடுகளின் தலைவர்கள்.**

சமீபத்தில் சீனாவில் இரண்டாவது உலகப்போர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ராணுவ அணிவகுப்பு நடந்தது. அப்போது சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் ரஷ்ய அதிபர் புதினும் பேசிக்கொண்டனர்.

அந்த உரையாடலில், "கடந்த காலத்தில், மக்கள் 70 வயதைத் தாண்டி வாழ்வது என்பது அரிது. ஆனால், இன்று உங்கள் 70களில்கூட, இன்னும் ஒரு குழந்தையாகவே இருக்கிறீர்கள்" என்று புதினைப் புகழ்ந்தார் ஜி ஜின்பிங்.

அதற்கு புதின், "ஆம். இன்னும் சில ஆண்டுகளில், உயிரி தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன் மனித உறுப்புகள் தொடர்ந்து மாற்றப்படும். நீங்கள் எவ்வளவு காலம் வாழ்கிறீர்களோ, அவ்வளவு இளமையாக இருப்பீர்கள். அந்த வகையில் இறவாமை என்பது இனி சாத்தியமாகும். நவீனத் தொழில்நுட்பம், சுகாதார அமைப்புகள் மற்றும் அறுவை சிகிச்சையின் திறனைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் மனிதகுலம் 150 வயது வரை வாழும் வாய்ப்பு உருவாகலாம்" என்றார் புதின்.

மனித உடலானது மாற்று உறுப்புகளை நிராகரிக்காமல் இருக்கப் புதிய வழிமுறைகளை உருவாக்கும் பணியில் உலக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றிகளை உறுப்பு தானம் தரும் விலங்குகளாகப் பயன்படுத்துகின்றனர். ’CRISPR என்னும் மரபணுத் திருத்தச் செயல்பாடு (Gene editing) மூலம், பன்றிகளின் சில மரபணுக்கள் அகற்றப்பட்டு, சில மனித மரபணுக்கள் அங்கு சேர்க்கப்படுகின்றன. இதனால் உறுப்புகள் மனிதர்களுக்கு ஏற்றவையாக மாறுகின்றன."மனித உடலுக்கு ஏற்ற வகையில் பன்றிகளின் உறுப்புகள் இருப்பதால், இவ்வித சிறப்புப் பன்றிகளை வளர்ப்பது சிறந்த வழியாகும்" என்கின்றனர் நிபுணர்கள். இந்தச் செயல்முறை இன்னும் ஆரம்பப் பரிசோதனை நிலையிலேயே இருக்கிறது. இருந்தாலும், இதுவரை இதயம் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் இந்த வழியில் செய்யப்பட்டுள்ளன.

### உதவிக்கு வரும் ஸ்டெம் செல்கள்

மனித உடலில் இருக்கிற ஸ்டெம் செல்கள் (Stem cells) மூலம் புதிய செல்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதிலும், இதன் வழியாகப் புதிய உடல் உறுப்புகளைப் பெற முடியும் என்பதிலும் நவீன மருத்துவம் ஆராய்ச்சிகளை மேம்படுத்திவருகிறது. ஸ்டெம் செல்கள் என்பவை உடலின் அடிப்படை செல்கள் ஆகும். ஸ்டெம் செல்லை மரத்தின் விதைக்கு ஒப்பிடலாம். ஒரு விதையானது வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி எனப் பல அவதாரங்கள் எடுப்பதுபோல், ஒரு ஸ்டெம் செல்லிலிருந்து உடலின் அனைத்து உறுப்புகளும் உருவாகலாம். இந்த அடிப்படையில் 2020 டிசம்பரில், இங்கிலாந்தின் UCL மற்றும் Francis Crick நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மனித நோய்த் தடுப்பாற்றல் அமைப்பில் (Immune system) அத்தியாவசியமான தைமஸ் உறுப்பை உருவாக்கி, எலிகளில் பதியம் செய்தபோது அது மனித உடலில் செயல்படுவதுபோல் செயல்பட்டது. இது உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் ஏற்பட்டுள்ள ஒரு புதிய முன்னேற்றம் ஆகும்.

பிறப்பு, இறப்பு என்ற வட்டத்துக்குள்ளே தான் மதங்களும் கடவுள்களும் சுற்றி சுழன்றுக் கொண்டே இருக்கின்றன. அனைத்துக்கும் பொறுப்பு ஏற்பது கடவுள்தான் என்ற பிற்போக்கு சிந்தனைகளை அறிவியல் தகர்த்து வருகிறது. கடவுள்கள் கலாவதியாகும் காலத்தில், இங்கே ஆன்மா, மறுஜென்மம், தர்ப்பணம், சமஸ்கிருதம் என்று மடமையில் மூழ்கிப்போய் கிடக்கிறார்கள்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பெரியார் பற்றிய சரியான புரிதலுக்கு அவரது மூலநூல்களைப் படிக்க வேண்டும்

**- கொளத்தூர் மணி**

**குடிஅரசு தொகுப்புகளை வெளியிட்ட பதிப்பாசிரியர் கொளத்தூர் மணிக்கு சிறந்த பதிப்பாளர் விருதை சீர் வாசகர் வட்டம் வழங்கியது. விருது ஏற்பு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை; கடந்த இதழின் தொடர்ச்சி.**

பெரியார் பட்டத்தை யார் கொடுத்தது என்று விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. பெரியார் பட்டத்தை யாரும் கொடுக்கவில்லை. 1929-ல் செங்கல்பட்டு மாநாட்டில் கடைசி தீர்மானம், இந்த சுயமரியாதை இயக்கத்தைக் கட்டி எழுப்பி இதை நடத்திக் கொண்டிருக்கிற ராமசாமி பெரியார் என்பவருக்கு எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

1938-ல் பெரியார் என்ற பட்டம் வழங்கவில்லை. பெண்கள் நடத்திய அந்த மாநாட்டில் ஈ.வெ.ராமசாமியை எழுத்திலும், பேச்சிலும் 'பெரியார்' என்று குறிப்பிட வேண்டும் என்றே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெரியார் என்ற பட்டம் வழங்கப்படவில்லை.



தியாகராய நகர் மாதர் முன்னேற்றக் கழகம் செயலாளராக இருந்த டாக்டர் தர்மாம்பாள் தீர்மானங்களை முன்மொழிந்தார். அந்தத் தீர்மானத்தை 11.11.1938-ல் விடுதலை இதழில் வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த தீர்மானத்தில் பெரியார் என்ற சிறப்புப் பெயரால் மட்டுமே அழைக்க வேண்டும் என்று இருக்கிறது. குடிஅரசு இதழ்களை படிக்கும் போது தான் இது போன்ற செய்திகளை அறிய முடிகிறது.

பெரியார் தமிழை காட்டுமிராண்டி மொழி என்று சொல்லியதாக செய்தி. ஆனால் பெரியார் என்ன சொல்கிறார்? என்றால் உன்னுடைய மொழி அதாவது தற்காலிக தமிழ் "யாயும் யாயும் யாராகியனரோ, யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று பேசுகிற தமிழாகவா இருக்கிறது? காட்டுமிராண்டி தமிழாக அல்லவா இருக்கிறது? என்றுதான் கூறினார். இந்த வரிகளை எல்லாம் விட்டுவிட்டு பெரியார் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னார் என்று மட்டுமே பேசி வருகிறார்கள். இப்படி ஒரு குற்றச்சாட்டை கூறிய போது பெரியார் மறுக்கவில்லை. “ஆமாம் நான் சொன்னேன்” என்றார். எப்போதும் அவர் மறுக்கவே இல்லை.

ராமன் படத்தை செருப்பல் அடித்ததாக குற்றச்சாட்டு வந்தபோது, பெரியாரிடம் கேட்டார்கள்; பெரியார் ஆமாம் அடித்தேன் என்று சொன்னேன். ஆமாம் இன்னும் அடிக்க வேண்டிய சாமிகள் நிறைய இருக்கிறது. அடிக்க வேண்டிய ஆசாமிகளும் இருக்கிறார்கள்; படிப்படியாக முன்னேறுவோம் என்று பெரியார் சொல்லியிருக்கிறார்.

பெரியாரை மூலத்தில் படிக்க வேண்டும். பிரம்ம சூத்திரத்துக்கு மூன்று நபர்கள் உரை எழுதினார்கள் மூன்று பேரும் வெவ்வேறு விதத்தில் உரை எழுதினார்கள். ஒரே நூலுக்கு மூன்று நபர்கள் எழுதிய உரை மூன்று மதப் பிரிவாக மாறுகிறது. ஆகவே பெரியாருக்கு அப்படி ஏதும் நிகழ்ந்து விடக்கூடாது. நாமே பெரியாரைத் தெரிந்து கொள்வோம். எழுத்தை மூலத்தில் படிப்போம்; அவர் சொன்னதை கேட்போம் என்று தான் நாங்கள் குடி அரசு தொகுப்புப் பணியை செய்யத் துவங்கினோம்.

1949 வரை பிறகு எந்தவித சிரமமும் இல்லாமல் திராவிடர் கழகம் குடி அரசு தொகுப்பை வெளியிட்டுள்ளது. எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. வரவேண்டும் என்றுதான் நாங்கள் விரும்பினோம். விடுதலையும் அப்படித்தான் வர வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

பெரியாரே, சொல்லுவார் நான் பல தவறுகளை இழைத்து இருக்கலாம். அது என் அறிவுக் குறைவு காரணமாக நிகழ்ந்திருக்கலாம். ஆனால் எந்த ஒன்றையும் ஆராய்ச்சிக்கும் அனுபவத்திற்கும் உட்பட்டு மாற்றிக் கொண்டிருப்பேனே தவிர இதனால் எனக்கு ஆபத்து வரும் என்ற அச்சத்தினாலோ ஆதாயம் வரும் என்ற மகிழ்ச்சியினாலோ செய்திருக்க மாட்டேன் என்றார். லட்சியத்தையும் அவர்தான் கொடுத்தார்; வேலை திட்டமும் அவர்தான் கொடுத்தார். இரண்டுக்கும் உள்ள முரண்பாடுகள் இயல்பாகவே வரும். சென்னைக்குப் போவது லட்சியம் என்று சொல்லிவிட்டால் என்னை நீங்கள் சேலத்தில் நிறுத்தி கேட்கக் கூடாது. நீ சென்னைக்குப் போகிறாய், சேலத்தில் என்ன வேலை என்று கேட்க முடியாது அப்படித்தான். பெரியார் ஒவ்வொரு படியாக சமுதாயத்தை தன்னுடன் அழைத்துச் சென்றார். லட்சியத்தை சொல்லிவிட்டு அவர் போகவில்லை. தன் காலகட்டத்தில் வேலைத் திட்டங்களில் நிறைவேற்ற முயற்சித்தார்; முழுமையாக நிறைவேறாமல் இருக்கலாம் பயணம் தொடருகிறது.

இப்போது சில தற்குறித் தலைவர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். பெரியார் எத்தனை ஜாதிகளை ஒழித்தார்? என்று கேட்பார்கள். ஜாதி என்ன மனிதனா ஒவ்வொருவராக கொலை செய்துவிட்டுப் போவதற்கு? எல்லோரும் ஒன்றாக சேர்ந்து ஜாதிய சிந்தனைகளை அழித்தால் தான் அது அழியும். ஒவ்வொரு ஜாதியாக ஒழித்து விட்டா போக முடியும்? இப்படி சில முட்டாள்கள் இருக்கிறார்கள். இப்போது தலைவராகி விட்டார்கள். அதுவும் தமிழ்த் தேசியம் பேசுகிற தலைவர்களாக கேள்வி கேட்கிறார்கள்.

இந்த விருது என்பது எனக்கு மட்டுமல்ல; என்னோடு சேர்ந்து உழைத்த அத்தனை தோழர்களுக்கும் ஒவ்வொருவரும் போய்ச் சேர்ந்ததாக கருத வேண்டும். ஆத்தூரில் இருந்து ஒரு இஸ்லாமிய தோழர் தன்னிடம் குடிஅரசு இருக்கிறது என்று என்னிடம் தகவல் சொல்கிறார். உடனே கொடுத்து அனுப்புங்கள் என்று சொல்லி கொடுத்து அனுப்பினார். அவரிடமிருந்தது வெறும் ஐந்து தாள்கள் தான்; அதை பத்திரமாக வைத்திருந்து எங்களிடம் கொடுத்தார். நாங்கள் என்ன செய்தோம் என்றால் அவர் கொடுத்த அந்த ஐந்து குடி அரசு தாள்களையும் லேமினேட் செய்து அவரிடம் திருப்பிக் கொடுத்தோம்.

ஒவ்வொருவராக தோழர் என்னிடம் இருக்கிறது, என்னிடம் இருக்கிறது என்று தகவல் சொன்னார்கள். தோழர் சாலமன் பாப்பையா வைத்திருந்தார் வைத்திருப்போம் என்று யாராவது எதிர்பார்த்து இருப்போமா? அவர் வைத்திருந்தார். ஒரு பழைய புத்தகக் கடையில் குடி அரசு இருந்தது, அதை உடனே வாங்கி வந்து பத்திரப்படுத்தி வைத்திருந்தார் சாலமன் பாப்பையா. யாதவர் கல்லூரியில் இருந்து வாங்கி இருக்கிறோம். நாங்கள் குடிஅரசு தொகுப்பை அச்சிட்டுக் கொடுத்த போது கூட அவர்கள் பணம் கொடுத்து தான் அதை வாங்கிக் கொண்டார்கள். 'குடிஅரசு' இதழை எடுத்து நூலாக்கம் செய்த தோழர்கள் ஏராளம் இருக்கிறார்கள். ஒவ்வொருவரையும் தனித்தனியாக சொல்ல முடியாது. ஒரு பெரிய கூட்டமே இதில் வேலை செய்திருக்கிறது. தோழர் குரிசில் வேலை செய்து இருக்கிறார். மின்வாரியத்தில் வேதியியல் ஆய்வாளராக இருந்தவர். பணிநிமித்தமாக அவர் வட மாநிலங்களுக்கு போனார். குடி அரசு திருத்தங்களை அங்கிருந்து கொண்டு செய்தார். இரவு பகலாக தோழர் தாமரைக் கண்ணன் தட்டச்சு பணிகளை மேற்கொண்டார். இப்படி நிறைய தோழர்கள் குடிஅரசு நூலாக்கம் பெறுவதில் உழைத்திருக்கிறார்கள். சமூகத்தைப் புரட்டிப் போடுகிற ஒரு தலைவருடைய சிந்தனைகள் எழுத்துக்கள், அது சமுதாயத்திடம் போய்ச் சேரவேண்டும் என்று அக்கறையில் செய்திருக்கிறார்கள். நாங்கள் வெற்றி பெற்று இருக்கிறோம்.

இப்போது கூட சிலர் குடிஅரசை நாங்களும் வெளியிடலாமா? என்று கேட்கிறார்கள்; தாராளமாக வெளியிடுங்கள் எங்களுக்கு எந்த சிக்கலும் இல்லை என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம்.

50 ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் இளைஞர்கள் என்னை பிற்போக்குவாதி என்று கூறுவார்கள். அந்த நிலையை நோக்கி சமுதாயம் வளர வேண்டும் என்றார் பெரியார்.

“தன்னை மகான் என்றோ, மகாத்மா என்றோ புகழாதீர்கள் என்னை அயோக்கியன் என்று சொல்லுங்கள்; அயோக்கியன் என்று சொன்னால்தான் என்னுடைய வார்த்தையை கூர்மையாக மக்கள் கவனிப்பார்கள். அப்போதுதான் என்னுடைய கருத்து அவர்களிடம் போய்ச் சேரும் என்றார் பெரியார். வேறு எந்த தலைவராவது இப்படி சொல்லி இருப்பார்களா? இதைப் படிக்கும் போதெல்லாம் வியப்பாக உள்ளது.

நீ ஜாதி இல்லை என்று சொல்கிறாயே உன்னுடைய மகளை பறையர் சமூகத்திடம் கொடுப்பியா? என்று கேட்டார்கள். இது அறிவீனமான கேள்வி அல்லது அயோக்கியத்தனமான கேள்வி. என் மகளை அவர் விரும்பியவருக்கே திருமணம் செய்து கொடுப்பேனே தவிர, தூக்கித் தருவதற்கு பண்டம் அல்ல அது மனித உயிர் என்று 1930-களில் பெரியார் சொன்னார். 1930 -1960 வரை ஒரே சிந்தனையில் பெரியார் பேசி இருக்கிறார். இப்படி பல செய்திகளை நாங்கள் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தோழர் தம்பிக்கு நன்றி சொல்ல வேண்டும். எங்களுக்கு முதல் அறிமுகமே 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூலின் வழியாகத்தான்.

நாம் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய தமிழ்நாட்டை சமத்துவமான ஜாதி பேதமற்ற, ஜாதி வெறியர்கள் இல்லாத ஒரு சமூகத்தை படைப்பதற்கு உழைப்போம். பெரியார் 1931-ல எழுதுகிறார்; உயர்ஜாதி, கீழ்ஜாதி என்கிற வர்ண பேதம் முடிய வேண்டும்; ஆண், பெண் என்ற பாலின பாகுபாடு ஒழிய வேண்டும்; ஏழை பணக்காரன் என்ற பொருளியல் பேதம் ஒழிய வேண்டும்; இதுவே நம்முடைய கொள்கையாக இருக்கட்டும் என்று அவர் சொல்கிறார். அந்த சமுதாயத்தை படைப்பதற்கு நாம் அனைவரும் நம்மால் ஆன வழிகளில் நம்மால் ஆன முயற்சிகளில் ஈடுபடுவோம் ஈடுபட வேண்டும் என்றார் கொளத்தூர் மணி.

## “பெரியாரிஸ்ட்” தமிழ்செல்வி இல்லத்தில் படத்திறப்பு



17/9/25 - சென்னை அன்று கொளத்தூர் பொன்னியம்மன் மேடு தணிகாசலம் நகர் பகுதியில் வசிக்கும் தோழர் தமிழ்ச்செல்வி இல்லத்தில் தந்தை பெரியாரின் 147 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவர் இல்லத்தில் பதிக்கப்பட்டு இருக்கும் தந்தை பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்து திறந்து வைத்தார் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன்.

கட்டுமான தொழிலதிபரான தோழர் தமிழ்செல்வி, தலித் மற்றும் இஸ்லாமியர்கள், அசைவ உணவு சாப்பிடுவோர்க்கு வீடு வழங்குவதில் முன்னுரிமையும் விலைச் சலுகைகளையும் தந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. U2 BRUTUS ஞான சத்யா, தமிழ்ச் செல்வி ஆகியோர் உரையாற்றினர். சமூகநீதி நாள் உறுதிமொழியும் எடுக்கப்பட்டது. திவிக சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர். பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : September 26, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran